நோர்த் யோர்க்கில் பச்சைக் கொள்கலம்

**இதழ் # 2 – மார்ச் 2006**

**பச்சைக் கொள்கலம் உங்களுக்கு நல்ல தோற்றத்தைக் கொடுக்கிறது…**

பச்சைக் கொள்கலப் பாவனைத் திட்டத்தில் ஏறத்தாழ 90 விழுக்காட்டினர் பங்குபற்றுவதாக வைத்து மட்டுக்கட்டும்பொழுது, உங்கள் அன்றாட வாழ்வில் அது ஓர் அங்கமாகி வருவது தெரிகிறது. உங்கள் உணவுக் கழிவு, அழுக்குத் தாள் போன்ற சேதனக் கழிவுகளை நீங்கள் புறம்புபடுத்தும் ஒவ்வொரு தடவையும் நிரவல் புலத்துக்கு அனுப்பப்படும் வீட்டுக் கழிவுகளின் தொகையை நீங்கள் குறைக்கிறீர்கள்.

தற்பொழுது ரொறன்ரோ மாநகரத்துக் குப்பை மிச்சிக்கனுக்கு ஏற்றி அனுப்பப்படுகிறது. அவ்வாறு ஏற்றி அனுப்புவதற்காக நாம் நிரவற்புல நடவடிக்கைகளை நெறிப்படுத்தும் கண்டிப்பான கொள்கைகளையும் நடைமுறைகளையும் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனினும் எமது கழிவு வகைகளை நாமே கையாண்டு, வேற்றிடத்து நிரவற்புலத்தை நாடும் தேவையை இயன்றவரை தவிர்ப்பதே எமது இறுதி இலக்கு. அந்த இலக்கை எய்துவதற்கு நாம் அரும்பாடுபட வேண்டியுள்ளது. ஆனால் அது சரியான திசையில்… மிச்சிக்கனை நோக்காத திசையில் எடுத்து வைக்கும் அடி ஆகும்.

பச்சைக் கொள்கலப் பாவனைத் திட்டம் புகுத்தப்படுவதற்கு முன்னர் நிரவற்புலம் சென்ற குப்பையுள் 30 விழுக்காட்டுக்கு மேற்பட்ட தொகை சேதனக் கழிவே. இத்திட்டத்துக்கமைய நிரவற்புலத்துக்குச் செல்லும் சேதனக் கழிவு “திசைதிருப்பப்பட்டு” பசளைக் கலவையாகப் பயன்படுத்தப்படும். தற்பொழுது மாநகரம் முழுவதும் செயற்படும் பச்சைக் கொள்கலப் பாவனைத் திட்டத்துக்கமைய ஆண்டு தோறும் ஏறத்தாழ 100,000 தொன் சேதனக் கழிவு நிரவற்புலம் செல்லப் போவதில்லை (அதாவது ஆண்டு தோறும் மிச்சிக்கனுக்குச் செல்லும் சுமையூர்திகளின் தொகையில் 2,750 குறையும்).

உங்கள் நற்பணிக்கும், பச்சைக் கொள்கலப் பாவனைத் திட்டத்தை வட அமெரிக்காவிலேயே மிகப்பெரிய, முற்போக்கான கழிவு-திசைதிருப்பல் திட்டமாக மாற்றுவதற்கு நீங்கள் புரியும் உதவிக்கும் எமது உளமார்ந்த நன்றி.

**மட்டுமீறிய பிளாஸ்திக்கு வகைகள் = படிமுறையிடுவதில் பிரச்சனைகள்**
ஒன்றில் உங்கள் பச்சைக் கொள்கலத்துக்கு அல்லது சமையலறைக் கொள்கலத்துக்கு ஒரு பிளாஸ்திக்குப் பையை உள்ளுறையாகப் பயன்படுத்தலாம். ஆனால் உங்கள் பிளாஸ்திக்குப் பைகளையும், பாண் பைகளையும், வேறு பிளாஸ்திக்குப் பொதிகளையும் பச்சைக் கொள்கலத்தினுள் இடலாகாது. படிமுறையிடற் களத்து வேலைப்பாட்டின் தரத்தை மட்டுமீறிய பிளாஸ்திக்கு வகைகள் வெகுவாகப் பாதிக்கும்.

உங்கள் சேதனக் கழிவுகளை அவற்றின் பிளாஸ்திக்குப் பொதியிலிருந்து அகற்றிய பின்னரே அவற்றைக் கொள்கலத்தினுள் இடவும். (எ-கா: சான்ட்விச்சை அதன் பையிலிந்து அகற்றிக் கொள்கலத்தினுள் இடவும்). உங்கள் கொள்கலங்களுக்கு நீங்கள் உள்ளுறையாகப் பயன்படுத்தும் பிளாஸ்திக்குப் பைகளை அகற்றுவதற்கு மாத்திரமே எமது படிமுறையிடற் களத்துப் பொறிமுறைகள் வடிவமைக்கப்பட்டவை–அவை பிளாஸ்திக்குப் பொதிகளை அகற்றுவதற்கு வடிவமைக்கப்பட்டவை அல்ல.

குறிப்பு: துப்புரவான, வளமான கலப்புப் பசளை ஆக்குவதற்கு பிளாஸ்திக்கு வகைகள் உதவா.

**பச்சைக் கொள்கலத்தினுள் இடக்கூடியவை (இடக்கூடாதவை)…**

பச்சைக் கொள்கலத்தினுள் இடக்கூடியவை...

- பழவகை, மரக்கறிக் கழிவுகள்
- இறைச்சி, சிப்பி, மீன் வகைகள்
- பஸ்டா, பாண், தானிய உணவு வகைகள்
- முட்டைக் கோது, பாலுணவு வகைகள்
- காப்பிக் கட்டை, வடி, தேயிலைச் சரைகள்
- அழுக்கு துடைப்புத் தாள், ஒற்றுத் தாள் வகைகள்
- அழுக்கடைந்த உணவுச் சரைகள்–உடன் உணவு பொதிவுத் தாள், ஐஸ்கிறீம் பெட்டி, மவின் தாள், மா–சீனி பை வகைகள்
- (மூடிகள் அகற்றிய) கடதாசிக் காப்பிக் குவளை , கோப்பை வகைகள்
- இனிப்பு, விசுக்கோத்து, கேக்கு வகைகள்
- மூலிகை, நறுமணச் சரக்கு, வேகும் பண்டத்தில் சேரும் கூறுகள்
- மண்ணுடன் கூடிய வீட்டுத் தாவரங்கள்

- கழிவுக் கச்சு, உடல்தூய்மை பேணும் பொருட்கள்
- பிராணிகளின் கழிவு, படுக்கை (எடுத்துக்காட்டாக பறவை/சிறு பிராணிக் கூட்டுக் கழிவு)
- பூனை மலம்
- பிராணிகளின் உணவு வகைகள்

இவற்றை பச்சைக் கொள்கலத்தினுள் இடவேண்டாம்…

(இவை உருக்குலைய மாட்டா. ஆதலால் இவற்றைப் பசளைக் கலவையாக மாற்ற முடியாது).

- பிளாஸ்திக்காலான பொதி உறை, பை, சாண்ட்விச் பை வகைகள்
- பிளாஸ்திக்காலான உணவு கொள்கலங்கள் (எ-கா: தயிர் அல்லது மாஜறின் கொள்கலங்கள்), கத்தி-முள்ளுக் கரண்டி வகைகள்
- பிளாஸ்திக்காலான பால் பை வகைகள்
- ஸ்டைறோபோம், இறைச்சித் தட்டுக்குப் பதிக்கும் உறை வகைகள்
- உலோகச் சருகு வகைகள்
- மெழுகுத் தாள்
- தோல், துணி, உடுப்பு வகைகள்
- சிகரெட்டு அடிக்கட்டை, புகையிலை வகைகள்
- தக்கைகள் (வைன் போத்தில் தக்கைகள் முதலியவை)
- சுவிங்கம்
- காது சுத்தப்படுத்தும் பொருள், பஞ்சுச் சுருள்
- குழந்தைகளைத் துடைக்கும் துணி வகைகள்
- ஓற்றி எறியும் துணி வகைகள்
- உலர்த்தி தூசு, தகடு வகைகள்
- உறிஞ்சி-பை, கழிவு வகைகள்
- தலைமுடி, பிராணிகளின் உரோமம், இறகுகள்
- கணப்புச் சாம்பர், இறைச்சி வாட்டும் வாயு அடுப்பு (BBQ) சாம்பர்
- மரச் சாமான், சப்பை வகைகள்
- மெழுகுதிரிகள்
- மீள்பாவனைக்கு இடக்கூடிய பொருள்வகைகள் அனைத்தும்

**மீள்பாவனைக்கிடும் பொருட்களைக் கலந்து வைக்கவும்…**

நீல, சாம்பல்நிறப் பெட்டிகளில் மீள்பாவனைக்கு இடக்கூடிய பொருட்களைக் கலந்து ஒரே பெட்டியில் இடலாம்! மீள்பாவனைக்கு இடக்கூடிய பொருட்களைப் புறம்பாக்கிப் படிமுறையிடும் தொழினுட்பம் கொண்ட களங்கள் வாய்ந்த மாநகரமாய் ரொறன்ரோ தற்பொழுது திகழ்கிறது. எனவே நீங்கள் (போத்தில், பேணி போன்ற) கலங்களையும் கடதாசி வகைகளையும் ஒன்றாகக் கலந்து வைக்கலாம்.

அதாவது நீங்கள் வழமைபோல் தொடர்ந்தும் பொருட்களைப் புறம்பாக மீள்பாவனைக்கு இடலாம் அல்லது நீல, சாம்பல்நிறப் பெட்டிகளில் மீள்பாவனைக்கு இடக்கூடிய பொருட்களைக் கலந்து வசதியான ஒரு பெட்டியில் இடலாம். ஒரு பெட்டி நிறைந்தால், எஞ்சிய பொருட்களை மறு பெட்டியில் இடலாம். எவ்வாறாயினும், மீள்பாவனைக்கு இடுவதை மறக்க வேண்டாம்!

அதாவது மீள்பாவனைக்குரிய பொருட்களைக் கலந்து வைக்கவும். அதேவேளை, உங்கள் சேதனக் கழிவைப் பச்சைக் கொள்கலத்தில் இடத் தவறக் கூடாது. அதுவே அதற்குரிய கலம்.

**பச்சைக் கொள்கலம் பிரச்சனை கொடுக்கிறதா?**

உங்கள் பச்சைக் கொள்கலம் தெறிக்கவோ உடையவோ வாய்ப்பில்லை. அப்படி நேர்ந்தால், மாநகரம் அதற்கு மாற்றுக் கொள்கலம் கொடுக்கும் (உங்கள் நீலப் பெட்டியின் கதையும் அதுவே). உங்கள் உடைந்த கொள்கலத்தை நீங்கள் ஒப்படைக்க வேண்டும். மேலதிக விபரங்களுக்கு எம்முடன் தொடர்புகொள்ளவும்: 416-338-2010. அல்லது எமது இணையத் தளத்தை நாடவும்: www.toronto.ca/recycle.

**உங்கள் கேள்விகள்… பச்சைக் கொள்கலங்கள் பற்றி நீங்கள் எம்மிடம் கேட்ட முக்கிய கேள்விகள்:**

கேள்வி 1: எனது பச்சைக் கொள்கலத்துக்கும் சமையலறைக் கொள்கலத்துக்கும் பிளாஸ்திக்குப் பைகளை உள்ளுறையாகப் பயன்படுத்த வேண்டுமா?

ஆம் – ஆனால் தயவுசெய்து இரண்டு கொள்கலங்களுக்கும் உள்ளுறை இடவேண்டாம். ஒன்றில் உங்கள் உள்ளக அல்லது வெளிப்புறப் பச்சைக் கொள்கலத்துக்கு, இரண்டில் ஒன்றுக்கு, ஒரு பிளாஸ்திக்குப் பையை உள்ளுறையாக இடவும் - இரண்டுக்கும் அல்ல. எந்தக் கொள்கலத்துக்கும் ஒரு சிறப்பான பையைப் பயன்படுத்த வேண்டியதில்லை. விரும்பினால், நீங்கள் பலசரக்கு கொள்வனவு செய்த பிளாஸ்திக்குப் பைகளை உங்கள் உள்ளகக் கொள்கலத்துக்கு உள்ளுறையாகப் பயன்படுத்தலாம். அது நிறைந்த பின்னர் அதனை அகற்றி, முறுக்கி அல்லது இளக்கிக் கட்டி வெளிப்புறப் பச்சைக் கொள்கலத்தினுள் இடவும். நீங்கள் வெளிப்புறப் பச்சைக் கொள்கலத்துக்கு உள்ளுறை இட விரும்பினால், அதற்கு (பச்சைக் குப்பைப் பை போன்ற) பெரிய பிளாஸ்திக்குப் பை எதனையும் பயன்படுத்தலாம். **தயவுசெய்து உங்கள் சேதனக் கழிவை ஒரு பையிலிடாது பச்சைக் கொள்கலத்தினுள் வீசவேண்டாம்.** ஏனெனில் பிளாஸ்திக்கு உள்ளுறை:

- நெடியைக் குறைக்கும்
- ஏற்றும்பொழுது கொட்டுப்படுவதைத் தடுக்கும்
- சேதனக் கழிவு கொள்கலத்துடன் உறைந்து ஒட்டுப்படுவதைத் தடுக்கும்
- உங்கள் கொள்கலங்களைத் துப்புரவாக வைத்திருக்க உதவும்.

உங்கள் வெளிப்புறக் கொள்கலத்துக்குப் பயன்படுத்தும் பிளாஸ்திக்கு உள்ளுறையை அக்கொள்கலத்தினுள் முற்றிலுமாக அமுக்கிய பின்னரே அதனைத் தெருவோரம் இட்டு வைக்கவும். நெடியுடன் கூடிய அதன் விளிம்புகள் பிராணிகளை ஈர்க்கும் அல்லவா!

கேள்வி 2: கழிவு அகற்றப்படும் நாளுக்கு முன்னரே கொள்கலம் நிறைந்தால் அல்லது அதன் எடை மிகுந்தால், நான் என்ன செய்வது?

20 கிலோகிறாம் (44 இறாத்தல்) எடையை விஞ்சிய கொள்கலக் கழிவு அகற்றப்பட மாட்டாது. ஆகவே உங்கள் மிதமிஞ்சிய கழிவுக்கு ஒரு பெரிய கண்ணாடிப் பிளாஸ்திக்குப் பையைப் பயன்படுத்தவும். **உணவுக் கழிவுகள் அல்லாத (கழிவுக்கச்சுகள் போன்ற) கழிவுகளைப் பிராணிகள் நாடா. எனவே அவற்றுக்கு மிதமிஞ்சிய கழிவுக்குரிய பையைப் பயன்படுத்தவும். அதேவேளை மிதமிஞ்சிய கழிவுக்குரிய பை 20 கிலோகிறாம் (44 இறாத்தல்) எடையை விஞ்சாவாறு பார்த்துக் கொள்ளவும்.** விரும்பினால், உங்கள் உள்ளூர் ஹோம் ஹாட்வெயர் நிலையத்தில் அல்லது எமது ரொறன்ரோ மாநகரத்துக் களங்களுள் அல்லது இடைமாற்று நிலையங்களுள் ஒன்றில் $18 விலைக்கு இன்னொரு பச்சைக் கொள்கலத்தை வாங்கலாம் ($5 விலைக்கு ஓர் உள்ளக சமையலறைக் கொள்கலத்தை வாங்கலாம்). விபரங்களுக்கு எமது இணையத் தளத்தை நாடவும்: www.toronto.ca/recycle. அல்லது தொடர்புகொள்ளவும்: 416-338-2010.

கேள்வி 3: பிராணிகளும் கொறிவிலங்குகளும் பச்சைக் கொள்கலத்தினுள் நுழையுமா?

கொள்கலங்கள் நீடித்து நிலைக்க வல்லவை. பிராணிகளுக்கும் கொறிவிலங்குகளுக்கும் ஈடுகொடுக்கும் விதமாகவே அவை வடிவமைக்கப்பட்டவை. எனினும் நான்கு-கால் பிராணிகளைப் பின்வாங்கச் செய்வதற்கு நீங்கள் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்:

- உங்கள் பச்சைக் கொள்கலத்தைப் பத்திரமாய் மூடிப் பூட்டிய பின்னரே அதனை வெளியே வைக்கவும்.
- பிராணிகள் பையின் விளிம்புகளைப் பற்றி இழுக்க ஆசைப்படும். அதனால் கொள்கலம் சரிந்து விழுந்துவிடும். ஆகவே உங்கள் வெளிப்புறக் கொள்கலத்துக்கு உள்ளுறையாக இடும் பையை (முறுக்கிக் கட்டாது) இளக்கிக் கட்டி, அதனைக் கொள்கலத்தினுள் அமுக்கி வெளியே வைக்கவும்.
- தமது பச்சைக் கொள்கலத்தைப் பின்வளவில் வைத்தெடுப்பவர்கள் அதன் மூடிக்கு மேலாக இரு கைபிடிகளையும் ஒரு விசைநாடாவினால் பிணைத்து விடவும். **அந்த விசைநாடாவை அகற்றிய பின்னரே அதனைத் தெருவோரம் வைக்கவும்.** குறிப்பு: நீண்ட விசைநாடா பயன்படாது.
- பச்சைக் கொள்கலத்தை இயன்றவரை முதல்நாளிரவு வெளியே வைப்பதை விடுத்து காலையில் (காலை 7:00 மணிக்கு முன்னர்) வெளியே வைக்கவும்.

**வேறு கேள்விகள் எவையும்? மேலதிக விபரங்கள் எவையும்?**
பச்சைக் கொள்கலப் பாவனைத் திட்டத்தைப் பற்றி நீங்கள் ஏதாவது கேட்டறிய விரும்பினால், எமது வாடிக்கையாளர் சேவையுடன் தொடர்புகொள்ளவும்: 416-338-2010. அல்லது எமது இணையத் தளத்தை நாடவும்: www.toronto.ca/greenbin